பக்கங்கள் 19+ 04

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 25 சனிக்கிழமை 11.10.2025 | அதிர்வு 72

## சட்டத்தரணி மீது தாக்குதல்: கான்ஸ்டபிளுக்கு மறியல்!



கல்கிஸை நீதிவான் நீதி மன்றத்தில் வளாகத்தில் சட் டத்தரணி ஒருவரைத் தாக்கிக் காயப் படுத்தினார் எனக் கூறப்படும் 04▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# ராஜபக்ஷக்களை தூக்கிலிட வேண்டும்

## அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி வலியுறுத்து



இந்த நாட்டைச் சூறையாடி மோசடி செய்து குடும்ப ஆட்சி நடத்திய ராஜபக்ஷக்களைத் தூக்கிலிட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரான அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் 04▶

# ஐ.தே.கவுடன் இணைந்து செயற்பட ஐக்கிய மக்கள் சக்திக்கு அனுமதி!

## ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தகவல்

தமது கட்சி தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு கட்சியின் முகாமைத்து வக்குழு மற்றும் செயற்குழு என்பன அனுமதி வழங்கியுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரி வித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம்



அவர் மேலும் கூறியதாவது:-

"வரலாற்று முக்கியத்துவமிக்க இந்த முடிவை கட்சியின் மத்திய குழு இம் முறையே முதன்முறையாக எடுத்துள் ளது. அதற்கமைய இரு தரப்புகளுக்கு சிறப்பான பயணத்தை மேற்கொள்ள முடியும்.

எம்மிடையே பிளவுகள் இல்லை. அதனால்தான் ஐக்கிய 04▶



# வவுனியா - வேப்பங்குளத்தில் அரச ஊழியர்கள் போராட்டம்

(கி.வசந்தன்)

வவுனியா, ஓமந்தை, வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத் திட்டத்துக்கு செல்லும் பாதையால் கனரக வாகனங்கள் செல்வதால் வீதி சேதம் அடைவதாகத் தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் இன்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓமந்தை, வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள கருங்கல் குவாரி ஒன்றிலிருந்து தினமும் 60 இற் கும் மேற்பட்ட டிப்பர் வாகனங்கள் சென்று வருவதனால் சிறிய வீதியாக உள்ள குறித்த வீதி தற்போது சேதமடைந்து மக்கள் பாவனைக்கு உதவாத வகையில் மாற்றம் அடைந்து இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதியின் ஊடாக கனரக வாகனங்கள் செல்வதை அனுமதிக்க வேண்டாம் எனத் தெரிவித்தும், அந்தப் பகுதி மக்கள் இதன் காரணமாக விபத்துகளுக்கு உள்ளாகுவதாகவும் தெரிவித்தும் அவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓமந்தை, வேப்பங்குளம், விளாத்திக்குளம் போன்ற பகுதிகளுக்குச் செல்லும் வீதியை ஊடறுத்துச் செல்லும் ரயில் பாதையில் பாதுகாப்பு கடவையின்மை மற்றும் ரயில் செல்கின்ற போது சமிச்சைகள் இல்லை எனவும் இதன்போது அவர்கள் தெரிவித்ததுடன் அதனை அமைக்க வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த பகுதிக்கு வருகை தந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களோடு கலந்துரையாடியதோடு இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சரோடு கலந்துரையாடுவதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினரிடம் ஜனாதிபதிக்கு கையளிக்கும் வகையில் ஒரு மகஜர் ஒன்றும் வழங்கப்பட்டது.

அங்கு வருகை தந்த ஓமந்தைப் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களோடு கலந்துரையாடியதுடன் பிரதேச சபை தலைவர், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், கற்குவாரியின் உரிமையாளர்களை அழைத்து இது தொடர்பில் ஒரு முடிவை எட்டுவதாகவும் தெரிவித்தனர்.

இதன்பின்னர் போராட்டம் கைவிடப்பட்டதோடு நாடாளுமன்ற உறுப்பினர் அந்தப் பகுதிக்குச் சென்று கல்குவாரியை பார்வையிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.








# யாழில் மாணவிகளுக்குப் பாலியல் சீண்டல்: ஆசிரியர் ஒருவருக்கு எதிராக முறைப்பாடு!



யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் மாணவிகளுடன் அங்கசேட்டையில் ஈடுபட்டார் என்று ஆசிரியர் ஒருவருக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பத்தாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவிகள் மீதே அந்த ஆசிரியர் அங்க சேட்டையில் ஈடுபட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில், மாணவர்கள் தமது பெற்றோருக்குத் தெரியப்படுத்திய நிலையில், பெற்றோரால் பாடசாலை நிர்வாகத்திடம் முறையிடப்பட்டுள்ளது.

எனினும், பாடசாலை நிர்வாகம் உடன் நடவடிக்கைகளை எடுக்காததைத் தொடர்ந்தே, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# புலோலி விபத்தில் இருவர் படுகாயம்!




யாழ். வடமராட்சி, புலோலி – சாரையடிப் பகுதியில் ஓட்டோ – மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இருவரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பிரதான வீதியில் பயணித்த ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் புலோலி – சாரையடி பகுதியில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் பத்தமேனி, அச்சுவேலியைச் சேர்ந்த செல்வகுமார் மகாலிங்கம் (வயது 54) மற்றும் குடத்தனை மேற்கைச் சேர்ந்த பாலசுரேஸ் ஐதுசன் (வயது 25) ஆகியோரே படுகாயடமடைந்தனர்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## மலையக சமூகத்தினருக்கான

# வீட்டு உரிமைப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நாளை



மலையக சமூகத்தினருக்கான வீட்டு உரிமைப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை பண்டாரவளை பொது விளையாட்டு மைதானத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெறும்.

இந்திய நிதி உதவியுடன் செயற்படுத்தப்படும் 10 ஆயிரம் வீடமைப்புத் திட்டத்தின் நான்காவது கட்டத்தின் 2 ஆயிரம் பயனாளிகளுக்கு இங்கு வீட்டு உரிமைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வசதியான வீடு, சுகாதாரமான வாழ்க்கை என்ற தொனிப்பொருளின் கீழ், இலங்கை அரசு, இந்திய அரசுடன் இணைந்து, மலையக சமூகத்தினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் செயற்படுத்தப்படும் இந்த வீட்டுத் திட்டம், மலையக சமூகத்தினருக்கு ஒரு வீட்டை வழங்குவதோடு மட்டுமல்லாமல், தாய்நாட்டுக்கு ஆற்றலை வழங்கும் "மதிப்புக்குரிய பிரஜைகளாக" அவர்களை மாற்றுவதற்கான அடித்தளமாகவும் இருக்கும்.

அதன்படி, மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் வசிக்கும் மலையக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும், அடிப்படை வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான, சுற்றுச்சூழலுக்கு உகந்த வீடுகளை வழங்குவதும் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். இந்த வீடுகளை வழங்குவதற்கான முறையான வழிமுறையின் மூலம் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பது ஒரு விசேட அம்சமாகும்.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன, பிரதி அமைச்சர் பிரதீப் சுந்தரலிங்கம், ஏனைய அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் இந்திய அரச பிரதிநிதிகள் குழு ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ள

# கொள்கலன் விவகாரத்துக்கும் அமைச்சரவை மாற்றத்துக்கும் எந்தவித தொடர்பும் இல்லை!

## அமைச்சர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ தெரிவிப்பு

கொழும்பு துறைமுகத்தில் இருந்து கொள்கலன்களைச் சோதனையின்றி விடுவிக்கப்பட்ட விவகாரத்தை அடுத்தே அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் இருந்து துறைமுகங்கள், விமான நிலையங்கள் அமைச்சு பறிக்கப்பட்டதாகக் கூறப்படுவதை அரசு நிராகரித்துள்ளது.

அரசு தனது இலக்குகளை விரைவாக அடையும் வகையில், மிகவும் பொருத்தமான மற்றும் அறிவியல் முறையில் அமைச்சுக்களை மறுசீரமைப்பதே அமைச்சரவை மறுசீரமைப்பின் நோக்கம்



என்று தொழிலாளர் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொள்கலன்கள் விவகாரம் காரணமாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க துறைமுகங்கள் அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டாரா என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், 'அமைச்சர் பிமல் ரத்நாயக்க அவ்வாறு நீக்கப்படவில்லை. ஆனால், சரியான நேரத்தில் அவருக்கு இன்னும் பெரிய பொறுப்பு கிடைக்கும்.

இது விரைவில் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்படும்." – என்றார்.

# காணாமல்போன வயோதிபர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

கிணற்றிலிருந்து இன்று சனிக்கிழமை பிற்பகல் வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி, கலவானை, வெத்தாகல பிரதேசத்தில் அமைந்துள்ள தோட்டம் ஒன்றில் உள்ள கிணற்றிலிருந்தே வயோதிபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கலவானை, வெத்தாகல பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி வயோதிபர் நேற்று வெள்ளிக்கிழமை இரவு வீட்டிலிருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பாமல் இருந்துள்ளார்.

இதனால் வயோதிபரின் உறவினர்கள் அவரைத் தேடும் பணியில் ஈடுபட்ட போது கிணற்றிலிருந்து சடலத்தைக் கண்டுபிடித்த நிலையில் உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் கிணற்றிலிருந்து சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக



வைத்தியசாலைக்க அனுப்பி வைத்துள்ளனர்.

வயோதிபர் கிணற்றில் தவறி வீழ்ந்திருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கலவானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ராஜபக்ஷக்களை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறுகையில்,

“ஊழல், மோசடி இல்லாத ஆட்சியை தேசிய மக்கள் சக்தி நடத்தி வருகின்றது.

நாட்டைச் சூறையாடி மோசடி செய்து குடும்ப ஆட்சி நடத்திய ராஜபக்ஷக்கள் சட்டத்தின் பிரகாரம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள். அவர்களைத் தூக்கிலிட வேண்டும்.

இந்த நாட்டின் பொருளாதாரம் படுபாதாளத்தில் வீழ்ந்தமைக்கு ராஜபக்ஷக்களே பிரதான காரணம்.

எமது ஆட்சியில் இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பி வருகின்றோம். ஊழல், மோசடி இல்லாத மக்கள் அபிவிருத்தியே எமது நோக்கம். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.” – என்றார்.

## சட்டத்தரணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் கான்ஸ்டபிளை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தரணி ஒருவர், கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வழக்கு விசாரணையை முடித்துவிட்டு, மீண்டும் வீடு நோக்கிச் செல்வதற்காக நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தியிருந்த தனது காரைச் செலுத்த முன்றுள்ளார்.

இதன்போது சிறைச்சாலை பஸ் ஒன்று நீதிமன்ற வளாகத்துக்குள் நுழைந்துள்ள நிலையில், பஸ்ஸை நிறுத்துவதற்காகக் காரை அங்கிருந்து எடுக்குமாறு பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சட்டத்தரணியிடம் கூறியுள்ளார்.

இதனால் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கும் சட்டத்தரணிக்கும் இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின் போது பொலிஸ் கான்ஸ்டபிள் சட்டத்தரணியைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து சந்தேகநபரான பொலிஸ் கான்ஸ்டபிள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.கவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங் கவுக்கு அநீதி இழைக்கப்பட்ட போது அதற்கு எதிராக ஒன்றாக எழுந்து நின்றோம். ரணில் விக்கிரமசிங்க என்பவர் எமது சிரேஷ்ட தலைவர். தலைமைத்துவம் தொடர்பில் இங்கு பிரச்சினை இல்லை. இந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படும். இரு கட்சிகளின் தலைவர்கள் மற்றும் கட்சிகளின் ஆதரவாளர்கள் இதற்கு ஆதரவளிப்பார்கள்.” – என்றார்.





# வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவியேற்றார் இந்திக்க கப்புகொட்டுவ

(கி.வசந்தன்)

வவுனியா மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக இந்திக்க கப்புகொட்டுவ, மதத் தலைவர்களின் ஆசிர்வாதத்துடன் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபராக செயற்பட்டு வந்த சாமந்த விஜயசேகர மேல் மாகாணத்தின் தெற்கு பிரிவுக்குப் பொறுப்பாக இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள நிலையில், வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபராக போக்கு வரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியாகச் செயற்பட்டு வந்த இந்திக்க கப்புகொட்டுவ நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் மதத்தலைவர்களின் ஆசிர்வாதத்துடன் இன்று கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இதன்போது மதத்தலைவர்கள், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் நிலையங்களின பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




















# வட கீழ்ப் பருவக் காற்றின் முதற் சுற்று மழை ஒக். 18 ஆம் திகதி தாழமுக்கத்துடன் ஆரம்பம்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வட கீழ்ப் பருவக் காற்றின் முதற் சுற்று மழை எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை தாழமுக்கத்துடன் ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

18 ஆம் திகதி ஆரம்பிக்கும் முதற் சுற்று மழை 30 ஆம் திகதி வரை தொடரும் வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும் வானிலை ஆய்வாளருமான பேராசிரியர்.நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

“எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தென்மேற்கு வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாகும். அத்துடன் வடகீழ்ப் பருவக்காற்று உடைவு ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாண்டு வட கீழ்ப் பருவக்காற்றுக் காலத்தில் வங்காள விரிகுடாவில் தோன்றும் தாழமுக்கங்கள் பெரும்பாலும் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கரையோரங்களிலேயே கரையைக் கடக்கும் வாய்ப்புள்ளன.

ஆகவே, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் மாகாண நிர்வாகங்கள், மாவட்ட நிர்வாகங்கள் போதுமான தயார்படுத்தல்கள், விழிப்புணர்வு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொள்வது சிறந்தது.

காலபோக நெற் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் இந்த மழை நிலைமைகளைக் கருத்தில்கொண்டு தமது பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறந்தது.” - என்றார்.

# அழிவடையும் கலை, கலாசாரத்தை தற்போது மேம்படுத்தி வருகின்றோம்

### புதுக்குடியிருப்பு மேம்பாட்டு பேரவையின் ஆலோசகர் பொன் . பேரின்பநாயகம்

(பா.சதீசன் )

புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் கலை, பண்பாடு அழிவடைந்து வருவதால் அதனை மெருகூட்டி கலைக்கும் கலாசாரத்துக்கும் புத்துயிர் ஊட்டும் நோக்கில் காத்தவராயன் கூத்து புதுக்குடியிருப்பில் இடம்பெறவுள்ளது என்று புதுக்குடியிருப்பு மேம்பாட்டு பேரவையின் ஆலோசகர் பொன் . பேரின்பநாயகம் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் கலை, பண்பாடு தொடர்பில் நேற்று (10) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்பு மேம்பாட்டு பேரவையானது 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்து மயான புனரமைப்போடு ஆரம்பிக்கப்பட்ட இந்த பேரவையானது தொடர்ந்து கொரோனா காலத்தில் நிவாரணங்கள் வழங்கியதோடு நலிவடைந்த மக்களுக்கு வேண்டிய உதவிகளை மேற்கொண்டு வந்திருந்ததை அறிந்திருந்திருப்பீர்கள்.

முதியோரைக் கௌரவிக்கும் நிகழ்வு, வறியவர்களுக்கு நிவாரணம், நலிவ



டைந்த மக்களின் சிறுகைத்தொழில் முயற்சிக்கு கடனுதவி வழங்கி மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இளைஞர்களுக்கு விழிப்பூட்டும் செயலமர்வுகள், இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், கல்விசார் நடவடிக்கைகள் பாடசாலையுடன் இணைந்து மேற்கொள்ளும் அதேவேளை பல அபிவிருத்தி திட்டங்களில் ஒன்றாக புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் கலை, பண்பாடு அழிவடைந்து வருவால் அதனை மெருகூட்டுவதற்காக வருடாவருடம் கலை பண்பாட்டு விழாவை நடத்த வேண்டும் என எமது திட்டத்தில் வரைந்துள்ளோம்.

கடந்த வருடம் புதுக்குடியிருப்பு பிரதேச கலை பண்பாட்டு பெருவிழா இடம்பெற்றிருந்தது. இவ்வருடம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரோடு இணைந்து புதுக்குடியிருப்பு பேரவை இந்த மேம்பாட்டு பண்பாட்டு விழாவை நடத்த இருக்கின்றது.

அந்தவகையில் பண்பாட்டுப் பெருவிழாவில் புரையோடியிருக்கும் காத்தவராயன் கூத்தை நடத்தத்த திட்டமிட்டுள்ளோம். இதில் எம்பிரதேசத்தில் நாட்டுக்கூத்து கலைஞர்களாக உள்ள பலர் பங்குகொள்ள இருக்கின்றார்கள். எதிர்வரும் 12 ஆம் திகதி பொன்விழா மண்டபத்தில் காத்தவராயன் கூத்து நடைபெறவுள்ளது. அந்த அவிழாவில் அனைத்து மக்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுவதுடன், கலை பண்பாட்டு நிகழ்ச்சியை அவர்களுக்கு. தெரியப்படுத்தும் நோக்கில் கிராமிய நடனம், ஆக்க இசையைப் போட்டியாக நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

போட்டியில் முதல் இடங்களை பெறுபவர்களுக்கு 18 ஆம் திகதி நடைபெறவுள்ள பண்பாட்டு பெருவிழாவில் பரிசில்கள் வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.எனவே அனைத்து மக்களையும் கலந்துகொண்டு கலைஞர்களுக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.- என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# செயல் வீரமே வேண்டும்

முன்னைய அரசுகளை ஊழல், மோசடி, முறைகேடுகள், முறையற்ற நிர்வாகம் போன்றவற்றில் ஈடுபட்டன என்று தொடர்ந்து குற்றச்சாட்டிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. வெறும் வாய்ப்பந்தல் முழம் போடாது. விடயத்தை செயலில் காட்டிக் கொண்டு தான் வாய்ச்சவடால் தொடர வேண்டும்.

ஆனால், தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசு செயலில் விடயங்களைக் காட்டுவதாக இல்லை - பழைய அரசுகளைக் குறை கூறுவதைத் தவிர.

உலக வங்கியில் இலங்கை தொடர்பான கண்காணிப்பு அறிக்கை ஒன்று இந்த விடயத்தை அம்பலப்படுத்தி இருக்கின்றது.

உலக வங்கி அறிக்கையின்படி, இந்த ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் அரசாங்கம் வரவு - செலவுத் திட்டத்தில் நிர்ணயித்த தொகைகளை செயல்படுத்துவது வழக்கத்திற்கு மாறாக மெதுவாகவே இருக்கின்றது, இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது சுமார் இருபது சதவீதம் சரிவு.

இந்த ஆண்டு ஜூலை மாதத்திற்குள், ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் 22.2 சதவீதம் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. இதுவே சுமார் இருபது வீத சரிவு எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மார்ச் 2025 இல் ஒதுக்கீட்டுச் சட்டம் நிறைவேற்றப்பட்டதும், மறுசீரமைப்பைத் தொடர்ந்து இருதரப்பு திட்டங்கள் எதிர்பார்த்ததை விட மெதுவாக மீண்டும் தொடங்கப்பட்டதும் இதற்குக் காரணம் என்று உலக வங்கி அறிக்கை கூறுகிறது.

கடந்த வருடத்தின் - 2024 ஆம் ஆண்டின் - ஜூலை மாதம் வரையான முதல் ஏழு மாத காலப்பகுதி என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசின் நிர்வாகக் காலம் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த நிர்வாகக் காலப்பகுதியில் அப்போதைய வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகைகளின் அடிப்படையில் திட்டங்களைச் செயல்படுத்துவது சுறுசுறுப்பாக முன்னெடுக்கப்பட்டது. அதனோடு ஒப்பிடுகையில் இந்த அரசின் காலத்தில் மந்த நிலை காணப்படுகிறது. வரவு - செலவு திட்ட ஒதுக்கீடுகள் உரிய முறையில் - உரிய வேகத்தில் - செயல்படுத்தப்படவில்லை என்பது தான் உலக வங்கியின் அவதானிப்பு அறிக்கை.

'நாங்கள் ஊழலில் ஈடுபடவில்லை. மோசடி செய்யவில்லை. முறைகேடுகளை இழைக்கவில்லை' என்றெல்லாம் பீற்றுவதில் அர்த்தமில்லை. இவற்றையெல்லாம் தாண்டி சுறுசுறுப்பான - நேர்மையான - பயனுள்ள - நிர்வாகத்தை நடத்துகிறோமா என்பதுதான் முக்கியமான விடயம். முறையற்ற நிர்வாகத்தில் ஈடுபடவில்லை என்பதைக் கூறுவதிலும் பார்க்க, முறையான - பயனுறுதிமிக்க - ஒழுங்கான - நிர்வாகத்தை நடத்துகிறோம் என்று கூறுவதில்தான் அரசு பெருமை கொள்ள வேண்டும்.

ஊழல், மோசடி, முறைகேடுகளில் ஈடுபடவில்லை என்பது சாதகமான நிலையாக இருந்தாலும், அதனையும் தாண்டி கட்டுறுதியான - பயனுள்ள - திறமையான - வினைத் திறன் மிக்க -அரச நிர்வாகத்தை நடைமுறையில் காட்ட வேண்டும். அதைச் செயலில் காட்டாமல் வெறும் வாய்ச்சவடால் அரசியல் தொடர்வதில் அர்த்தமில்லை.

இந்தக் காலகட்டத்தில் ஒப்பீட்டு ரீதியில் நாட்டின் மொத்த வருவாய் 26.5 சதவீதம் அதிகரித்துள்ளது என்று கூறப்பட்டாலும் அதுவும் கூட இறக்குமதிகள் மீதான வரிகள் கூட்டப்பட்டமையால் கிடைத்ததுதான். வாகன இறக்குமதிகள் வேகம் பெற்றமையால் உந்தப்பட்டமை இதற்கு ஒரு காரணம். இறக்குமதிகள் மீதான மதிப்புக் கூட்டப்பட்ட வரி, மோட்டார் வாகனங்கள் மீதான வரிகள் மற்றும் வர்த்தக வரிகள் போன்றவற்றை அதிகரித்து அதன் மூலம் அதிக வருவாயைத் தேடியமைதான் இந்தக் காலப் பகுதியில் இந்த அரசின் நிர்வாக சாதனை என்று கூறலாம்.





# சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் விழிப்புணர்வு பேரணி





(வாலகிருஸ்ணா)

சர்வதேச உளநல தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் மாபெரும் விழிப்புணர்வு பேரணியும் விழிப்புணர்வு நிகழ்வும் நேற்றுக் காலை நடைபெற்றன. இலங்கையில் தற்கொலைகளில் மட்டக்களப்பு மாவட்டம் இரண்டாது மாவட்டமாக உள்ள நிலையில் இந்த நிகழ்வு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

“பேரழிவுகள் மற்றும் அவசரநிலைகளில் மனநல சேவைகளை அணுகலுக்கான ஆதரவு” என்னும் தலைப்பில் இம்முறை உலக உளநல தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் உளவள பிரிவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர். முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் அருள்ராஜ், மட்டக்களப்பு வலய கல்வி பணிப்பாளர் தி.ரவி, உளவள வைத்திய நிபுணர் கமல்ராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் உளவள பிரிவின் பொறுப்பாளர் டாக்டர் டான் சௌந்தரராஜவின் ஏற்பாட்டின் கீழ் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பில் செயற்படும் பல்வேறு பொது அமைப்புகளும் உதவிகளை வழங்கியிருந்ததுடன் நிகழ்விலும் கலந்து கொண்டனர்.

இதன்போது மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகிலிருந்து உளவளத்தின் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலான மாபெரும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இந்த பேரணியானது கிழக்கு பல்கலைக்கழகத்தின் சௌக்கிய பராமரிப்பு பீடத்துக்கு முன்பாக வந்த நிலையில் அங்கு வண்ணாத்துப்பூச்சி சமாதான பூங்காவின் நாடக குழுவினரால் உளநலம் தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகம் நடத்தப்பட்டது.

அதனை தொடர்ந்து மீண்டும் பேரணியானது ஆரம்பித்து மட்டக்களப்பு திருகோணமலை வீதியூடாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் வரையில் சென்றது.

இதன்போது மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு முன்பாக விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் உளவளத்துறையில் நீண்டகாலமாக பங்காற்றிவரும் உளவளத்துறையின் மூத்த நிபுணரும் வண்ணத்துப்பூங்கா சிறுவர் பூங்காவின் தலைவருமான அருட்தந்தை போல் சற்குணநாயகம் இதன்போது கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் உளநலத்தின் அவசியம் தொடர்பிலும் அதன் தற்போதைய நிலைமைகள் குறித்தும் பல்வேறு உரைகளும் இதன்போது இடம்பெற்றன.

மனநலம் இல்லாமல் ஆரோக்கியம் இல்லை என்பதை உலக மனநல தினம் நமக்கு நினைவூட்டுகிறது. பேரழிவுகள், மோதல்கள் மற்றும் பொது சுகாதார அவசரநிலைகள் போன்ற மனிதாபிமான நெருக்கடிகளால் பாதிக்கப்பட்ட மக்களின் உளவியல் சமூகத் தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசரத் தேவையை இந்த ஆண்டு எடுத்துக்காட்டுகிறது.

நெருக்கடிகளின் போது ஐந்து பேரில் ஒருவர் மனநல பாதிப்பை அனுபவிப்பதால், சரியான நேரத்தில் கொடுக்கும் ஆதரவு மிக முக்கியமானது. ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட, சமூகம் சார்ந்த தலையீடுகளில் முதலீடு செய்வது உயிர்களைக் காப்பாற்றுகிறது, மீட்சியை ஊக்குவிக்கிறது மற்றும் மீட்சியை செயல்படுத்துகிறது.

இந்த நாளில், மனநல சேவை அனைவருக்கும், குறிப்பாக துன்ப காலங்களில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு மதிப்புமிக்கதாகவும், பாதுகாக்கப்பட்டதாகவும், அணுகக்கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்கான நமது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவோம் போன்ற பல்வேறு கருத்துகள் இதன்போது பகிரப்பட்டன.









# மன்னார் அடம்பன் கிராமத்தில் இடம்பெற்ற முதியோர் தின நிகழ்வு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் சிரேஷ்ட முதியோர் சங்கம் ஏற்பாடு செய்த முதியோர் தின நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை (10) காலை அடம்பன் முதியோர் சங்க கட்டடத்தில் இடம் பெற்றது.

பாரம்பரிய நடன, இசை, வாத்திய நிகழ்வுடன் குறித்த நிகழ்வு ஆரம்பமானது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் கே.அரவிந்தராஜ், சிறப்பு விருந்தினராக மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் விருந்தினர்களாக அடம்பன் வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர்,இலங்கை வங்கி முகாமையாளர், அடம்பன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

அதனைத் தொடர்ந்து 60 வயதுக்கு மேற்பட்ட நீண்ட காலமாக முதியோர் சங்கத் துடன் இணைந்து செயல்பட்ட மூன்று சிரேஷ்ட பிரஜைகள் கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நிகழ்வில் முதியோர் சங்க உறுப்பினர்கள், மாணவர்கள், பிரதேச மக்கள் கலந்து கொண்டனர்.





# போக்குவரத்து விதிமுறைகளை மீறிய 10 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல்!

## கல்முனையில் சம்பவம்

(பாறுக் ஷிஹான்)

பொதுப் போக்குவரத்துச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பலரது மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்ப்பட்டுள்ளன என்று கல்முனை தலைமையக பொலிஸ் மோட்டார் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதான பொலிஸ் பரிசோதகருமான பி.ரி நஸீர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நகரப்பகுதி உட்பட புறநகர் பகுதிகளில் வெள்ளிக்கிழமை விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஆவணம் காப்புறுதி எதுவும் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்துவது, சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்துவது தலைக்கவசம் அணியாது செல்வது , ஒரு மோட்டார் சைக்கிளில் இருவருக்கு மேற்பட்டவர்கள் பயணிப்பது, அதிவேகமாக செல்வது, மிக ஒலி எழுப்பிய மோட்டார் சைக்கிள்கள் தொடர்பில் தலைக்கவசம் இன்றியும் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இன்றி பயணித்தமை உள்ளிட்ட பொது போக்குவரத்து சட்டதிட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் 20 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் உட்பட அதனை ஓட்டிய சந்தேக நபர்கள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டனர்.





இந்தச் சோதனை நடவடிக்கையானது அம்பாறை மாவட்ட கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம். கே.இப்னு அஸார் வழிகாட்டலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுவாராய்ச்சி தலைமையில் மேற்கொள்ளப்பட்டன.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய பொதுப் போக்குவரத்துச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பலரது மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட சான்றுப் பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சம்மாந்துறை, சவளக்கடை, மத்திய முகாம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.




# கல்முனை சந்தையில் கட்டாக்காலிகள் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

**(பாறுக் ஷிஹான்)**

கல்முனை மாநகர பொதுச்சந்தையில் காலை, மாலை வேளைகளில் சுற்றித்திரியும் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு கல்முனை மாநகர சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்க பிரதிச் செயலாளர் எஸ்.எல் றாயீஸ் குறிப்பிட்டுள்ளார்.

கல்முனை மாநகர பொதுச் சந்தையில் ஏற்பாடு செய்த விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போது இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர மத்தியில் பட்டப்பகலில் கட்டாக்காலி மாடுகள் சுற்றித்திரிகின்றன. இதனால் பிரதான வீதியில் பயணிக்கும் மக்கள் அசௌகரியங்களுக்கு ஆளாகின்றனர். வாகனங்களில் பயணிப்போர் விபத்துகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

இது தவிர கல்முனையில் நடக்கும் வீதி விபத்துக்களில் இக்கட்டாக்காலி மாடுகளாலும் அதிகமான விபத்துச் சம்பவங்கள் ஏற்பட்டுவருகின்றன.

குறிப்பாக கல்முனையில் மக்கள் அதிக நடமாட்டம் உள்ள பொதுச்சந்தை நகரின் கடைத் தொகுதிகள் அமைந்துள்ள மத்திய பகுதிகள் பஸ்தரிப்பு நிலையம், வங்கிகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவை அமைந்துள்ள பகுதிகளில் மாடுகள் சுற்றித்திரிகின்றன.

கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையால் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தும் திட்டம் கொண்டுவரப்பட்டபோதிலும் அவை முறையாக அமுல்படுத்தப்படவில்லை. எனவே கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான முறையான திட்டம் ஒன்றை வகுத்துச் செயற்படவேண்டும்.

பொதுச்சந்தையில் மாடுகள் தொல்லை தொடர்ச்சியாக உள்ளது. இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்திர தீர்வு இதுவரை இல்லாமல் உள்ளது. எமது பொதுச்சந்தையில் மக்களை விட மாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

சந்தைக்குப் பொருள்களைக் கொள்வனவு செய்ய வந்திருந்த பெண்களை மாடு முட்டியதால் அவர்கள் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சந்தையில் மரக்கறிகளை உண்ண வந்த மாட்டைத் துரத்துவதற்காக வியாபாரி தயாரான போது தன்னை காப்பாற்ற மாடு வீதியால் சென்ற பொதுமகனை மோதிய சம்பவமும் பதிவாகியுள்ளது.

இதனால் வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்தவரும் காயமடைந்த நிலையில் மோட்டார் சைக்கிளும் சேதமடைந்தது.இதை விட ஒரு மாதத்துக்கு முன்னர் கர்ப்பிணி தாய் ஒருவருக்கு சந்தைப் பகுதியில் மாடுகள் குத்தி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவ மும் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறான தொடர்ச்சியாக சம்பவங்கள் மாடுகளால் இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றன.- என்றார்.


இது தொடர்பில் கல்முனை மாநகர ஆணையாளருக்கு பல தடவை அறிவித்திருக்கின்றோம்.எவரும் இதில் உடனடி நடவடிக்கை எடுத்து நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருவதாக தெரியவில்லை என ஆதங்கத்துடன் கல்முனை மாநகர பொதுச் சந்தை வர்த்தக சங்க செயலாளர் ஏ.எல். கபீர் தெரிவித்தார்.













# தொழிநுட்ப வருகையால் அழிந்து போன பழமை!

தொழிநுட்பம் நமது வாழ்க்கையை எளிதாக்கியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அதன் அபரிமிதமான வளர்ச்சி, நமது பழமையான கலாச்சார விழுமியங்களையும், பாரம்பரியங்களையும் மெதுவாக அழித்து வருகிறது என்பது கவலைக்குரிய உண்மை. தொழிநுட்பத்தால் நாம் இழந்தது வெறும் பழக்கவழக்கங்கள் மட்டுமல்ல, எம்முடைய வாழ்வையும் தான்.

தொழிநுட்பம் நமது அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் ஊடுருவி, பழமையான பலவற்றை மாற்றியமைத்துள்ளது. உதாரணமாக, ஒரு காலத்தில், உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் நேரடியாகச் சென்று பேசுவது, கடிதம் எழுதுவது, நேரில் சந்தித்து ஆறுதல் கூறுவது போன்ற பழக்கங்கள் இருந்தன. ஆனால் இன்று, இவை அனைத்தும் தொலைபேசி அழைப்புகள், குறுஞ்செய்திகள், மற்றும் சமூக ஊடகப் பதிவுகளாக சுருங்கிவிட்டன. இந்த மாற்றத்தால், உண்மையான மனித உறவுகளின் ஆழம் குறைந்து வருகிறது. உறவுகள் வெறும் டிஜிட்டல் திரைக்குள் அடைபட்டுள்ளன. தொழிநுட்பம் நமது கல்வி முறையிலும் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு காலத்தில், நூலகங்களுக்குச் சென்று, புத்தகங்களைத் தேடி, குறிப்புகளை எடுத்து, ஆசிரியர்களுடன் விவாதிப்பது ஒரு வழக்கமாக இருந்தது. ஆனால், இன்று கூகுள் போன்ற தேடுபொறிகள் மூலம் ஒரே கிளிக்கில் தகவல்களைப் பெற முடிகிறது. இது மாணவர்களின் தேடல் திறனையும், ஆழ்ந்த சிந்தனையையும் குறைத்துவிட்டது. பாரம்பரியக் கல்வி முறையின் முக்கிய அம்சமான ஆசிரியருடன் நேரடி தொடர்பு மற்றும் குழு விவாதம் போன்றவை மெதுவாக மறைந்து வருகின்றன.

தொழிநுட்பத்தின் தாக்கம் கிராமிய சமூகங்களிலும் எதிரொலிக்கிறது. ஒரு காலத்தில், கிராமப்புறங்களில் இரவு நேரங்களில் கூடி, கிராமியக் கதைகள், நாட்டுப்புறப் பாடல்கள், மற்றும் கூத்து போன்ற பாரம்பரியக் கலைகளைப் பார்த்து மகிழ்ந்தனர். ஆனால், இன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், மற்றும் இணையத்தளத் தொடர்புகள் இந்த இடத்தைப் பிடித்துள்ளன. இந்த மாற்றத்தால், கிராமியக் கலைகள், அவை சார்ந்த கலைஞர்கள் மற்றும் அதன் வரலாறு போன்றவை மெதுவாக மறைந்து வருகின்றன.

அதேபோல், விவசாயத் துறையிலும் பாரம்பரிய வழிமுறைகள், நவீன எந்திரங்களால் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. பாரம்பரிய உழவு முறைகள், விதைகள், மற்றும் உரங்கள் ஆகியவை நவீன தொழில்நுட்பத்தால் மாற்றப்பட்டுள்ளன. இது ஒருபுறம் உற்பத்தித் திறனை அதிகரித்தாலும், மறுபுறம், பாரம்பரிய விவசாய அறிவையும், அதன் முக்கியத்துவத்தையும் அழித்துவிட்டது.

தொழிநுட்பத்தின் வருகையால் மனிதர்களின் நினைவாற்றல் திறன் குறைந்து வருகிறது. ஒரு காலத்தில், நாம் தொலைபேசி எண்களையும், பிறந்த நாள் மற்றும் முக்கியமான தேதிகளையும் மனப்பாடம் செய்தோம். ஆனால் இன்று, நமது ஸ்மார்ட்ஃபோன்கள் அனைத்தும் சேமித்து வைப்பதால், நாம் மனப்பாடம் செய்யும் திறனை இழந்துவிட்டோம். அதேபோல, தொழிநுட்பம் நமது வேலை செய்யும் முறையையும் மாற்றியுள்ளது. ஒரு காலத்தில், அலுவலகத்தில் நேரடி சந்திப்புகள், விவாதங்கள் மற்றும் கைகளால் எழுதப்பட்ட அறிக்கைகள் இருந்தன. ஆனால் இன்று, ஈ-மெயில்கள், காணொளி அழைப்புகள் மற்றும் டிஜிட்டல் ஆவணங்கள் மூலம் அனைத்து வேலைகளும் செய்யப்படுகின்றன. இது வேலை செய்யும் முறையை வேகப்படுத்தினாலும், நேரடி மனித தொடர்புகளின் முக்கியத்துவத்தை குறைத்துள்ளது. ஒரு பணியிடத்தில் உள்ள ஊழியர்களின் தனிப்பட்ட உறவுகள் மற்றும் புரிதல் குறைந்துவிட்டது.

தொழிநுட்பம் நமது பொழுதுபோக்கு வழிகளையும் மாற்றியுள்ளது. ஒரு காலத்தில், நாடகங்கள், திரைப்படங்கள் மற்றும் நேரடி நிகழ்ச்சிகளைப் பார்க்க மக்கள் ஒன்று கூடுவார்கள். ஆனால் இன்று, நாம் அனைவரும் நம்முடைய ஸ்மார்ட் போன்களில் தனித்தனியாகத் திரைப்படங்கள், இசை மற்றும் காணொளிகளைப் பார்க்கிறோம். இது சமூகத்தின் ஒற்றுமை உணர்வையும், மக்கள் ஒன்றாகக் கூடி மகிழும் பழக்கத்தையும் குறைத்துள்ளது. தொழில்நுட்பம் நமது தொடர்பு முறையை மாற்றியமைத்ததோடு மட்டுமல்லாமல், நமது மொழி பயன்பாட்டையும் ஆழமாகப் பாதித்துள்ளது. ஒரு காலத்தில், நாம் வார்த்தைகளை கவனமாகத் தேர்ந்தெடுத்து, இலக்கணப் பிழையின்றிப் பேசினோம்.

ஆனால் இன்று, குறுஞ்செய்திகளிலும், சமூக வலைத்தளங்களிலும் பயன்படுத்தப்படும் சுருக்கப்பட்ட

தொடர்ச்சி▼

# தொழிநுட்ப வருகையால் அழிந்து போன பழமை!

**தொடர்ச்சி▲**

வார்த்தைகள், ஸ்லாங் மற்றும் எமோஜிகள், மொழியின் நேர்த்தியையும், செழுமையையும் குறைத்துவிட்டன. இந்த மாற்றங்கள் புதிய தலைமுறையினரின் மொழித் திறனைப் பாதித்து, பாரம்பரிய இலக்கியம் மற்றும் பேச்சுவழக்கில் இருந்து அவர்களை அந்நியப்படுத்தியுள்ளது. தாய்மொழியில் எழுதுவதையும், பேசுவதையும் குறைத்து, ஆங்கிலம் கலந்த ஒரு கலவை மொழியைப் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக, பல உள்ளூர் மொழிகள் மற்றும் பேச்சு வழக்குகள் அழிந்துபோகும் அபாயத்தை எதிர்கொள்கின்றன.

தொழில்நுட்பம் நமது வரலாறு மற்றும் பாரம்பரியங்களை அணுகும் முறையையும் மாற்றியுள்ளது. ஒரு காலத்தில், நமது வரலாறு வாய்மொழிக் கதைகள், நாடகங்கள், மற்றும் வரலாற்று நூல்கள் மூலம் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால் இன்று, தகவல்கள் அனைத்தும் இணையத்தில் கிடைக்கின்றன. இது ஒருபுறம் நல்லது என்றாலும், மறுபுறம், இணையத்தில் பரவும் தவறான தகவல்கள் மற்றும் போலியான வரலாற்றுப் பதிவுகள், நமது உண்மையான வரலாற்றை மறைத்து, குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. மேலும், டிஜிட்டல் ஆவணங்கள், காகித ஆவணங்களைப் போல நிரந்தரமானவை அல்ல. அவை ஒரு தொழில்நுட்ப மாற்றம் அல்லது ஒரு சர்வர் செயலிழப்பு காரணமாக அழிந்துபோகும் அபாயத்தை எதிர்கொள்கின்றன. தொழில்நுட்பத்தின் வளர்ச்சி நமது சமுதாயத்தின் எதிர்காலத்தைக் குறித்த பல கேள்விகளை எழுப்புகிறது. செயற்கை நுண்ணறிவு (AI), ரோபோடிக்ஸ் மற்றும் ஆட்டோமேஷன் ஆகியவை மனிதர்களின் பல வேலைகளைப் பறித்துவிடும் என்று கூறப்படுகிறது. இது ஒருபுறம் உற்பத்தித் திறனை அதிகரித்தாலும், மறுபுறம், பெரிய அளவிலான வேலை இழப்புக்கு வழிவகுக்கும். மனிதநேயம் மற்றும் தொழில்நுட்பத்துக்கு இடையேயான சமநிலை என்பது எதிர்காலத்தில் ஒரு முக்கியமான சவாலாக இருக்கும். நாம் தொழில்நுட்பத்தை நமது வாழ்க்கையின் ஒரு பகுதியாகக் கொண்டுள்ளோம். ஆனால், நாம் நமது மனித உணர்வுகளையும், பண்புகளையும் இழந்து, வெறும் இயந்திரங்களாக மாறிவிடக் கூடாது.

தொழில்நுட்பம் நமது வசதியை அதிகரித்த அதே சமயம், அது நமது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒரு காலத்தில், நமது உடல் உழைப்பு அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக இருந்தது. ஆனால் இன்று, லிஃப்டுகள், எஸ்கலேட்டர்கள் மற்றும் தானியங்கி வாகனங்கள் நமது இயக்கத்தைக் குறைத்துவிட்டன. இதன் விளைவாக, உடற்பருமன், நீரிழிவு மற்றும் இதய நோய்கள் போன்ற வாழ்வியல் நோய்கள் அதிகரித்து வருகின்றன. மேலும், ஸ்மார்ட்ஃபோன், கணினித் திரைகளில் நீண்ட நேரம் செலவிடுவதால், கண் சோர்வு, கழுத்து வலி போன்ற உடல்நலப் பிரச்சனைகளும் பொதுவானதாகிவிட்டன. மன ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை, சமூக ஊடகங்களில் மற்றவர்களின் “சிறந்த” வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்ப்பது, மன அழுத்தத்தையும், தாழ்வு மனப்பான்மையையும் அதிகரிக்கிறது. தொழில்நுட்பம் கலையிலும் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு காலத்தில், ஓவியர்கள் தங்கள் கைகளால் கேன்வாஸில் வண்ணம் தீட்டினர், சிற்பிகள் கற்களைக் கொண்டு கலைப் படைப்புகளை உருவாக்கினர். ஆனால் இன்று, டிஜிட்டல் ஓவியம், 3D பிரிண்டிங் போன்ற தொழில்நுட்பங்கள் கலையை ஜனநாயகப்படுத்திவிட்டன. இது ஒருபுறம்



நல்லது என்றாலும், மறுபுறம், ஒரு கைவினைஞரின் தனிப்பட்ட திறமை, அனுபவம் மற்றும் கைவினைப் பழக்கவழக்கங்கள் மெதுவாக மறைந்து வருகின்றன. ஒரு கலைஞரின் ஆத்மா அவரது படைப்பில் நேரடியாகப் பிரதிபலிப்பது குறைந்துவிட்டது. பாரம்பரிய இசைக் கருவிகளை வாசிப்பதைக் காட்டிலும், டிஜிட்டல் இசையை உருவாக்குவது எளிதாகிவிட்டது. இது பாரம்பரிய இசையின் தொன்மையைக் குறைத்து, புதிய தலைமுறையினரை அதிலிருந்து விலகச் செய்கிறது.

தொழில்நுட்பம் நமது சமூகப் பழக்கவழக்கங்களையும் மாற்றியுள்ளது. விருந்தினர்கள் வீட்டுக்கு வரும்போது, ஒரு காலத்தில் அனைவரும் ஒன்றாக அமர்ந்து பேசிக்கொண்டிருப்போம். ஆனால் இன்று, அனைவரும் தங்களது மொபைல் போன்களில் மூழ்கியிருப்பதைப் பார்க்கலாம். இந்த நிலைமை குடும்ப உறவுகளிலும், நண்பர்கள் வட்டத்திலும் ஒரு இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல், பண்டிகைக் காலங்களில், ஒரு காலத்தில் நாம் ஒருவருக்கொருவர் நேரில் சந்தித்து வாழ்த்துக்களை பரிமாறிக்கொண்டோம். ஆனால் இன்று, ஒரு எளிய குறுஞ்செய்தி அல்லது சமூக ஊடகப் பதிவுடன் இந்த வாழ்த்துக்கள் முடிந்துவிடுகின்றன. இது உறவுகளின் ஆழத்தைக் குறைத்து, சடங்குகளை வெறும் சம்பிரதாயங்களாக மாற்றிவிட்டது.

தொழில்நுட்பம் நமது பொருளாதாரப் பழக்கவழக்கங்களை அடியோடு மாற்றியுள்ளது. ஒரு காலத்தில், பணம் என்பது நாணயங்கள் மற்றும் காகிதத் தாள்களாக இருந்தது. இன்று, அது ஒரு கணினித் திரையில் உள்ள எண்களாக மாறிவிட்டது. டிஜிட்டல் பணப்பரிவர்த்தனைகள், கிரிப்டோகரன்சி போன்ற புதிய தொழில்நுட்பங்கள், பாரம்பரிய வங்கி முறைகளை மாற்றியமைத்துவிட்டன. இது ஒருபுறம் பரிவர்த்தனைகளை வேகப்படுத்தினாலும், மறுபுறம், பணத்தின் மீதான மனிதர்களின் நேரடிப் புரிதலையும், மதிப்பையும் குறைத்துள்ளது. பணத்தின் உடல் சார்ந்த வடிவம் இல்லாததால், செலவு செய்யும் பழக்கம் அதிகரித்துள்ளது.

தொழில்நுட்பம் நமது வாழ்க்கைக்கு ஒரு பெரும் உதவி. ஆனால் நாம் அதன் நன்மைகளை அனுபவிக்கும் அதே வேளையில், நமது பழமையான விழுமியங்களையும், பாரம்பரியங்களையும் பாதுகாக்க வேண்டும். நாம் தொழில்நுட்பத்தையும், மனித உணர்வுகளையும் ஒரு சமநிலையுடன் அணுக வேண்டும். இதுவே ஒரு முழுமையான வாழ்க்கைக்கு வழிவகுக்கும். நாம் தொழில்நுட்பத்தின் அடிமைகளாக இருக்காமல், அதை நமது தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டும்.



**த.தனுசன்,**
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# அரச வங்கிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு தீர்வு கோரி சிலாபத்தில் தீப்பந்த போராட்டம்!





**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் புத்தளம் மாவட்ட கிளை ஊழியர்களால் தீப்பந்த போராட்டம் மற்றும் கடவுள் பிரார்த்தனை என்பன வியாழக்கிழமை (9) இரவு சிலாபம் நகரின் மைத்தியில் முன்னெடுக்கப்பட்டன.

நாட்டில் அரச வங்கிகள் எதிர்கொள்ளும் தற்போதைய மற்றும் தொடர்ச்சியான பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வை வழங்குமாறு அரசை வலியுறுத்துவதற்காக இந்தத் தீப்பந்தப் போராட்டம் மற்றும் கடவுள் பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள பல அரச வங்கிகளின் ஊழியர்கள் இந்தத் தீப்பந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர்.




# குறிஞ்சி மலர்களை பார்க்க ஹார்டன் வருவோர் தேசிய பூங்கா விதிமுறைகளைப் பின்பற்றவும்!

### பூங்கா காப்பாளர் சிசிர ரத்நாயக்க தெரிவிப்பு

(மஸ்கெலியா )

ஹார்ட்டன் சமவெளி தேசிய பூங்காவில் குறிஞ்சி வசந்தத்தைக் காண நீங்கள் வந்தால், தேசிய பூங்காவின் தற்போதைய விதிகள் மற்றும் விதிமுறைகளின் செயல்பட வேண்டும் என்று ஹார்ட்டன் சமவெளி தேசிய பூங்கா வார்டன் சிசிர ரத்நாயக்க கூறினார்.

12 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த முறை நான்கு வகையான குறிஞ்சி மலர்கள் ஒன்றாக மலர்ந்துள்ளன. அவற்றைப் பார்க்க வார இறுதி நாள்களிலும் விடுமுறை நாளகளிலும் ஏராளமான மக்களும் ஏராளமான வாகனங்களில் தேசிய பூங்காவுக்குள் நுழைகின்றனர். இவ்வாறு வரும் சில குழுக்கள் ஒரு தேசிய பூங்காவின் விதிகள் மற்றும் விதிமுறைகளுக்கு மாறாக நடந்து கொள்கின்றன. அந்தக் குழுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.









# இரு வேறு குற்றச்சாட்டுகளில் நான்கு பேர் கைதாகினர்!

(பூ.லின்ரன்)

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகுதியில் இடம்பெறும் சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் அனுமதி பத்திரம் இன்றிச் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றி பயணித்த இரண்டு டிப்பர் வாகன சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், அதே பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திர சாரதி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் கல்லாறு பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 25 லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களம் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

குறித்த விடயங்கள் தொடர்பாகக் கைதான சந்தேக நபர்கள் நான்கு பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். தடயப் பொருள்களை எதிர்வரும் 15 ஆம் திகதியன்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அணையா விளக்குத் தூபி உடைக்கப்பட்டமைக்கு ஜனநாயக போராளிகள் கட்சி கண்டனம் தெரிவிப்பு

(பூ.லின்ரன்)

அணையா விளக்குத் தூபி உடைக்கப்பட்டமைக்கு ஜனநாயக போராளிகள் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன் இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 8 ஆம் திகதி அணையா விளக்கு தூபி விசமிகளால் அடித்து நொருக்கப்பட்டதை தொடர்ந்து இந்த அணையா விளக்கு தூபி உடனடியாக புனரமைப்புச் செய்யப்பட்டது.

தமிழ் தேசிய இருப்பைக் கருதியும் தமிழர் கடந்து வந்த வேதனைகள் அடுக்குமுறை மற்றும் படுகொலைகள் என்பவற்றைச் சந்ததிகளுக்கு கடத்தும் நோக்குடனும்தான் நினைவு தூபிகள் நிறுவப்படுகின்றன.

இந்த நிலையில் இதனைக் கொச்சைப்படுத்தும் நோக்குடன் செம்மணியில் மனித புதை குழி அடையாளம் காணப்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அணையா விளக்குத் தூபி அடித்து நொருக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டுள்ளது.



செம்மணி மனிதப் புதைகுழி மீதான இருள் நீங்கவும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்துக்குச் சர்வதேச நீதி கோரியும் யாழ்ப்பாணத்தின் செம்மணி பகுதியில் "அணையா விளக்கு" போராட்டம் "மக்கள் செயல்" எனப்படும் தன்னார்வ இளையோர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது.

அங்கு கடந்த ஜூன் மாதம் 23, 24 மற்றும் 25 ஆம் தினங்களில் அணையாவிளக்கு ஏற்றும் சிறு தூபி அமைக்கப்பட்டு அதில் தீபம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து பல கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இந்த நிலையில் தமிழர் மீது இருகும் தமது வன்மத்தைக் கட்டவிழ்த்து விடும் நோக்கில் இந்த நினைவுத்தூபி உடைக்கப்பட்டுள்ளமையானது, ஒவ்வொரு தமிழ் மக்களின் மீதும் இருக்கும் கொடூர எண்ணத்தை வெளிப்படுத்துகிறது.

இவ்வாறான மிலேஸ்சர் தனமாக செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுத்தூபிகள் உடைக்கப்படுவதால் படுகொலை செய்யப்பட்டவர்களை மீண்டும் மீண்டும் படுகொலை செய்யப்படுகிறார்கள் போன்ற உணர்வுகள் ஒவ்வொருவரின் மனதிலும் எழுகின்றன. அவர்களின் நீதிக்கான குரல் மற்றும் ஆத்மாக்கள் இந்த நினைவுத் தூபிகளை சுற்றி வருகின்றன. அவர்களுக்கான அஞ்சலிகள் மரியாதைகளை நீங்கள் கொடுக்க வில்லை என்றாலும் பரவாயில்லை இவ்வாறான கேவலமான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம். இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவர்களை அரசு உடனடியாக கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.– என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அதி நவீன அழகு ஆபத்தா?

சமீபத்தில் சமூக ஊடகங்கள் அனைத்திலும் உங்களின் நண்பர்கள், உறவினர்கள் குறிப்பாக பெண்கள் வண்ண மயமான புடைவைகளை அணிந்து கொண்டு, தலையில் பூச்சூடி காட்சியளிக்கும் புகைப் படங்கள் பதிவிடுவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். முதலில் இதைக் கண்டதும் அந்த புகைப்படத்தில் இருக்கும் பெண் உங்களுக்கு தெரிந்த பெண் என உங்களுக்கு தோன்றாது. யாரோ 90-களின் கதாநாயகி என்றே தோன்றும்.

அதில் பெரும்பாலானவர்கள் நீங்கள் இதற்கு முன் புடைவை கட்டியே பார்த்திடாதவர்களாக இருப்பர். இதுபோன்ற அனைத்துப் புகைப்படங்களும் செயற்கை நுண்ணறிவால் (AI) உருவாக்கப்பட்டவை ஆகும். சமீபத்தில் கூகுளின் நானோ பனானா (Nano Banana)) என்ற புதிய ஏஐ மாதிரி (image generation and editing model from Google DeepMind) இதற்கு பயன்படுத்தப்படுகிறது.

இதன் உண்மையான பெயர் ஜெமினை 2.5 ப்ளாஷ் இமேஜ் (Gemini 2.5 Flash Image) ஆகும். தற்போது நானோ பனானா என்ற பெயரில் பிரபலமாகி வருகிறது. சாதாரண புகைப்படத்தை உயர்தர 3D புகைப்படமாக மாற்றித் தருவதே இதன் முக்கிய பங்காகும். இந்த யுஐ கருவியின் உதவியுடன் சாதாரண நபரின் புகைப்படம் 90 களில் தோன்றும் நடிகர், நடிகையைப் போல் காட்சியளிக்கிறது. நம்மைச் சுற்றியுள்ள பெரும்பாலோனோர் தங்களின் புகைப்படங்களை இந்த கருவியின் மூலம் மாற்றி தங்களின் சமூக வலைத் தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

ஆனால், இந்த Ai கருவி ஆபத்தானது என்றும், கவனமாக இருக்க வேண்டும் என்றும் தொழில் நுட்ப வல்லுனர்கள் எச்சரித்துள்ளது.

சமீபத்தில் ஜெமினை (Gemini) செயலி மூலம் புகைப் படங்களை 3D புகைப்படங்களாக மாற்றி சமூக வலைத் தளத்தில் பதிவிடும் நடைமுறை அதிகரித்து வருகிறது.

அதில், உங்களின் புகைப்படத்தை 3D புகைப்படமாக மாற்றும் ஜெமினை மென்பொருள் அதிகம் ட்ரெண்டாகி வருகிறது. அதன் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளிலேயே, உங்களின் புகைப்படம் எங்களின் பயிற்சி தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் உங்களின் புகைப்படங்கள் தவறாகப் பயன்படுத்தப்படலாம். நீங்கள் சைபர் கிரைம் குற்றத்திலோ, மோசடியிலோ சிக்கக்கூடும். அதனால் யாரும் 3D புகைப்படங்களுக்காக ஜெமினை செயலியை பயன்படுத்தாதீர்கள்" எனக் கூறியுள்ளனர்.

**செயற்கை நுண்ணறிவு (AI) என்றால் என்ன?**

ஒரு கணினியை மனிதன் நினைப்பதைப் போலவே இயங்கச் செய்வதுதான் Ai தெழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு என்ற வார்த்தை முதன்முதலில் 1956 ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்டது. 1960ஆம் ஆண்டு மனிதனின் முடிவுகளை கணினிகளுக்கு எப்படி புகுத்துவது என்பதை விஞ்ஞானிகள் கற்றுக்கொடுத்தனர். ஒரு கணினியை மனிதன் நினைப்பதைப் போலவே இயங்கச் செய்வதுதான் Ai தொழில்நுட்பம். இந்த தொழில்நுட்பம், தன்னைச் சுற்றி இருக்கும் விடயங்களில் இருந்து தகவல்களை சேகரித்து, அது அறிந்துகொண்ட மற்றும் அதன் அறிவுக்கு எட்டிய விடயங்களைப் பொறுத்து தனது பதில்களைத் தயார் செய்கிறது. நமது செல்போன்கள், வீடியோ கேம்கள், ஷாப்பிங் என பெரும்பாலும் நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல கருவிகள் AI யைச் சார்ந்தவை. அதேபோல நாம் வீட்டில் பயன்படுத்தும் அலெக்ஸா, சிரி (Siri) போன்றவையும் Ai தொழில்நுட்பத்தை சார்ந்தவையே.

**நானோ பனானா என்றால் என்ன? அது எப்படி இயங்குகிறது?**

நானோ பனானா என்பது ஜெமினையின் புகைப்பட எடிட்டிங் கருவியாகும். கூகுளின் டீப் மைண்ட் (Deep Mind) பிரிவினர் இதை வடிவமைத்துள்ளனர். நானோ பனானா மூலம் உங்களின் " புகைப்படத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லலாம் " என ஜெமினையின் அதிகாரப்பூர்வ வலைதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீங்கள் உங்களை முற்றிலும் வேறுபட்ட ஒரு காட்சியில் கற்பனை செய்துகொள்ளலாம். உங்களின் புகைப் படத்திற்கு எந்தவிதமான கற்பனைகளை வேண்டுமானாலும் நீங்கள் சேர்த்துக்கொள்ளலாம். இந்த கட்டளைகளை எழுத்து வடிவில் நீங்கள் கொடுத்தால், உங்கள் கற்பனையில் இருந்த காட்சியை ஜெமினைப் புகைப்படமாக உங்களுக்குக் கொடுக்கும்.

நானோ பனானா மூலம் பயனர்கள் தங்களின் புகைப்படத்தைப் பல விதமாக மாற்றிக்கொள்ள முடியும். இது பயனர்கள் தங்களின் செல்ஃபி புகைப்படத்தின் பின்னணியை மாற்றவும் (Background) சாதாரண புகைப் படத்தில் கடல், மலை, அருவி என எதைவேண்டுமானாலும்

தொடர்ச்சி▼

# அதி நவீன அழகு ஆபத்தா?

**தொடர்ச்சி▲**

சேர்க்கவும் உதவுகிறது.

இருவேறு இடங்களில் இருந்து எடுக்கப்பட்ட புகைப் படங்களையும் ஒன்றிணைக்க உதவுகிறது. உங்களுக்கு பிடித்தமான புகைப்படங்களை சிறுவடிவமாக (miniatures) மாற்றிக்கொள்ளவும் உதவுகிறது. தற்போதைய புகைப் படங்களில் உள்ள உடைகளையும், காட்சிகளையும் கூட 80, 90 களில் இருப்பதைப் போல மாற்றுகிறது. நானோ பனானாவின் உதவியுடன் எந்த புகைப்படங்களும் பழங்காலத்து ஸ்டைலுக்கு (ரெட்ரோ ஸ்டைல்) மாற்றப்ப டுகின்றன. இதன் உதவியுடன் நீங்கள், உங்களுக்கு பிடித்த சிகை அலங்காரங்களையும் தேர்வு செய்து கொள்ள முடியும்.

**சிறப்புப் புகைப்படத்துக்கான சிறப்புக் கட்டளைகள் ?**

கூகுளின் ஜெமினை நானோ பனானாவை பொறுத்த வரை அதற்கு கொடுக்கப்படும் கட்டளைகள்தான் மிகவும் முக்கியம் என வல்லுநர்கள் கூறுகின்றனர். நீங்கள் கொடுக்கும் கட்டளைகளுக்கு ஏற்றவாறுதான் புகைப் படங்கள் உருவாக்கப்படுகின்றன.

உதாரணமாக உங்களுக்கு 3D Mini Age புகைப்படம் வேண்டுமென்றால் அதற்கான கட்டளை வேறுவிதமாக இருக்கும். அதே சமயம் உங்களுக்குப் பொலிவூட் ஸ்டைலில் ஒரு புகைப்படம் வேண்டுமென்றால் அதற் கான கட்டளைகள் வேறுவிதமாக இருக்கும். எனினும் இதில் உள்ள சிறப்பு அம்சம் என்னவென்றால், ஒரு வேளை நீங்கள் பிரபலங்களின் புகைப்படத்தை இதன் மூலம் மாற்ற விரும்பினால், அதுவே 'பிரபலங்களின் புகைப்படங்களை மாற்ற முடியாது' எனக் கூறிவிடுகிறது. ஆனால் சாதாரண நபர்கள் இந்தக் கருவி மூலம் தங்களின் ஐடி களில் இருந்து யாருடைய புகைப்படத் தையும் வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ளலாம்.

**கவனிக்க வேண்டியவை என்ன?**

ஜெமினையின் நானோ பனானா குறித்து BBC நேர்காணலிற்கு பஞ்சாபின் AI சிறப்பு திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சந்தீப் சிங் சந்தா வழங்கிய விடயங்கள். இவர் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் கணினி அறி வியலில் பிஎச்டி பயின்றுள்ளார்.

ஜெமினையின் நானோ பனானா கருவியை பயன் படுத்தும்போது கவனமாக இருக்கவேண்டும் என டாக்டர் சந்தீப் சிங் சந்தா எச்சரிக்கிறார். "கூகுள் ஒரு கௌரவமான நிறுவனம். ஒருவரின் தனிப்பட்ட விவரங்களை பாது காப்பது குறித்து கூகுள் சில விதிமுறைகள் மற்றும் வாக்குறுதிகளை கொடுத்துள்ளது. இவற்றை கூகுள் ஒருபோதும் மீறாது" என்கிறார்.

"ஆனால் சாதாரண நபர் கூகுள் நானோ பனானா மூலம் தங்களின் புகைப்படத்தை எடிட் செய்து அதை சமூக ஊடகங்களில் பதிவிடும்போது ஹேக்கர்கள் இதை பயன்படுத்தி தவறான காரியங்களுக்கு புகைப் படத்தை பயன்படுத்த வாய்ப்புள்ளது" என்கிறார்.

எது எவ்வாறாயினும் அதிக அழகைத் தரும் அதி நவீன தொழினுட்பங்களை நாம் பயன்படுத்தும் போது அதன் உட்கட்டமைப்புக்கள் பற்றிய போதிய அறிவை அறிந்து கொண்டு பயன்படுத்துவது சாலச் சிறந்தது எனலாம். ஏனெனில் போட்டி போடும் AI தொழினுட்ப உலகில் ஒருவரை ஒருவர் முந்திக் கொள்வதற்காக தொழினுட்பத்தின் தரவு மற்றும் தகவல்கள் எவ்வாறும் பயன்படுத்தப்படலாம்.



**நாகராசா தனுஸ்காந்,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.





# அ.தி.மு.க. கூட்டணிக்கு விஜய் வந்தால் பா.ஜ.கவை வெட்டிவிடுவார் எடப்பாடி

## டி.டி.வி.தினகரன் விமர்சனம்

'விஜய்அ.தி.மு.கவுடன்கூட்டணிசேர்ந்தால், பா.ஜ.கவை வெட்டி விட எடப்பாடி பழனிசாமி யோசிக்கமாட்டார்" என்று டி.டி.வி தினகரன் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்த பிரசாரக் கூட்டத்தில் த.வெ.க கொடி காட்டப்பட்டமை தொடர்பாக, அ.ம.மு.க பொதுச்செயலாளர் டி.டி.வி தினகரன் விமர்சனம் செய்துள்ளார்.

இது தொடர்பாக இன்று செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர்,

'தமது கட்சித்தொண்டர்களைவைத்தே த.வெ.க கொடியை தூக்கிப் பிடிக்க வைத்துள்ளார் எடப்பாடி பழனிசாமி. இது விஜய்யின் தலைமையை ஏற்று கூட்டணிக்குச் செல்ல பழனிசாமி தயாராகிவிட்டார் என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. எங்கள் தலைமையில்தான் ஆட்சி அமையும் என விஜய் சொல்கிறார். பழனிசாமி அதற்குத் தயாராகிவிட்டாரா? விஜய் தலைமையை ஏற்கும் வகையில் அ.தி.மு.க பலவீனமாகிவிட்டதா?

விஜய் அ.தி.முகவுடன் கூட்டணி சேர்ந்தால் பா.ஜ.கவை வெட்டி விட யோசிக்க மாட்டார் எடப்பாடி பழனிசாமி. விஜய் அ.தி.மு.க கூட்டணிக்கு வர வேண்டும் என்பதற்காக, அ.தி.மு.க தொண்டர்களை வைத்து த.வெ.க. கொடியை காண்பிக்கின்றனர்" என்று கூறினார்.

# மீண்டும் முன்பிணை மனு!

## உயர்நீதிமன்றில் தாக்கல் செய்தார் புஸ்ஸி ஆனந்த்

கரூர் சம்பவம் தொடர்பான வழக்கில் இரண்டாவது தடவையாக த.வெ.க. பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் முன் பிணை கேட்டு மனுத் தாக்கல் செய்துள்ளார். இதனையடுத்து விரைவில் மதுரை உயர்நீதிமன்றில் இம்மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த மாதம் 27ஆம் திகதி நடைபெற்ற தமிழக வெற்றிக்கழக பிரசாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், துணை பொதுச்செயலாளர் நிர்மல் குமார், கரூர் மாவட்ட செயலாளர் மதியழகன் உட்பட சிலர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்கில் ஏற்கனவே மதியழகன் உட்பட 2 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதனால் புஸ்ஸி ஆனந்த், நிர்மல் குமார் ஆகியோர் ஏற்கனவே தங்களுக்கு முன்பிணை வழங்கும்படி கேட்ட மனுவை மதுரை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.



இந்நிலையில் இரண்டாவது தடவையாக புஸ்ஸி ஆனந்த், தமக்கு முன்பிணை கேட்டு மதுரை உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், கரூரில் எங்கள் கட்சிக் கூட்டத்தின்போது பொலிஸாரின் அலட்சியம்தான் பலர் இறப்பதற்குக் காரணம். பலர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்ததாலும், விசாரணை தொடக்க கட்டத்தில் இருந்தமையையும் கருத்தில் கொண்டு ஏற்கனவே என்னுடைய முன்பிணை மனு தள்ளுபடியானது.

ஆனால், இப்போது அந்தச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட எவரும் சிகிச்சையில் இல்லை. மேலும் இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரை எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை. விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவேன். எனக்கு முன்பிணை வழங்கி உத்தரவிட வேண்டும்.

– இவ்வாறு மனுவில் கூறியுள்ளார்.

இந்த மனு, மதுரை உயர்நீதிமன்றில் விரைவில் விசாரணைக்கு வர உள்ளது.

# துருக்கியின் இருந்து பயணித்த பிரிட்டிஷ் ஏர்வேஸ் அவசர தரையிறக்கம்

துருக்கியின் இஸ்தான்புல்லில் இருந்து லண்டனுக்குச் சென்று கொண்டிருந்த பிரிட்டிஷ் ஏர்வேஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் ஒன்று அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

142 பயணிகளை ஏற்றிச் சென்ற ஏர்பஸ் ஏ - 320 என்ற குறித்த விமானம் நடுவானில் சென்றபோது விமானத்தில் இருந்து திடீரென புகை வெளியேறியதால் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பயணித்த 4 பேருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து ருமேனியா தலைநகர் புக்காரெஸ்ட் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டுள்ளது.

விமானம் தரையிறங்கியதும் அங்கு தயாராக இருந்த மீட்புக் குழுவினர் பயணிகளை பத்திரமாக வெளியேற்றியுள்ளனர்.

அதன்பின் மூச்சுத் திணறல் ஏற்பட்ட 4 பயணிகளுக்கு முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து விமான போக்குவரத்து துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சட்டவிரோத புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்த பிரித்தானியா - பிரான்ஸ் கூட்டு ஒப்பந்தம்

## முதன்முறையாக 19 பேரை பிரான்ஸுக்கு திருப்பி அனுப்பியது



பிரித்தானியாவும் பிரான்ஸும் சட்டவிரோத புலம்பெயர்தலைக் கட்டுப்படுத்தும் வகையில் செய்துகொண்டுள்ள ழுநெ ை, ழுநெ ழரவ திட்டத்தின் கீழ், முதன்முறையாக 19 புலம்பெயர்ந்தோரை பிரான்ஸுக்கு திருப்பி அனுப்பியுள்ளது.

பிரித்தானியாவும் பிரான்ஸும், பிரான்சிலிருந்து பிரித்தானியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்த புகலிடக் கோரிக்கையாளர்களை பிரான்ஸுக்கே திருப்பி அனுப்பும் வகையில் One in one out என்னும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

பிரான்ஸ் ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு புகலிடக் கோரிக்கையாளருக்கும் பதிலாக, பிரான்சிலிருந்து வரும் ஒரு புலம்பெயர்வோருக்கு பிரித்தானியா புகலிடம் அளிக்கும்.

One in one out திட்டத்தின் கீழ், ஒவ்வொரு புலம்பெயர்ந்தோராக பிரான்ஸுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுவந்த நிலையில், முதன்முறையாக ஒரு குழுவாக புலம்பெயர்ந்தோரை பிரான்ஸுக்கு திருப்பி அனுப்பியுள்ளது

கடந்த வாரம், இரண்டு விமானங்களில் 19 புலம்பெயர்ந்தோரை பிரித்தானியா பிரான்சுக்கு திருப்பி அனுப்பியுள்ளது என்று பிரித்தானிய உள்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதற்கு முன் தனித்தனியாக ஏழு பேர் பிரான்ஸுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளநிலையில், One in one out திட்டத்தின் கீழ்பிரான்சுக்குதிருப்பிஅனுப்பப்பட்ட சட்டவிரோத புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கை 26ஆக உயர்ந்துள்ளது.

## இரசாயனங்களை ஏற்றுமதி செய்யும்

# ஈரான் நிறுவனங்களுக்கு புதிய தடையை விதித்தது அமெ. இராஜாங்க திணைக்களம்

இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்கு பெற்றோலியம் மற்றும் இரசாயனங்களை ஏற்றுமதி செய்யும் ஈரான் நிறுவனங்களுக்கு, அமெரிக்க இராஜாங்க திணைக்களம் புதிய தடைகளை விதித்துள்ளது என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதற்கமைய, 50 இற்கும் மேற்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் கப்பல்களை இலக்கு வைத்து இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடை விதிக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் 2024 மற்றும் 2025ஆம் ஆண்டுகளில் பல மில்லியன் டொலர் பெறுமதியான எரிவாயு உள்ளிட்ட பெற்றோலிய உற்பத்திகளை ஏற்றுமதி செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஈரானிய ஏற்றுமதிகள் இலங்கை மற்றும் பங்களாதேஷை சென்றடைந்துள்ளன என்று சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்த நிலையில், குறித்த தடை விதிப்பானது, ஈரானின் நிறுவனங்கள் மற்றும் கப்பல் வலையமைப்பை சீர்குலைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதாகவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஈரானுக்கு பில்லியன் கணக்கான வருவாயை ஈட்டித்தரும் ஏற்றுமதியின் முக்கிய கூறுகளை இந்த செயற்பாடு சிதைக்கும் என்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

பக்கங்கள் - 4
கனடா முரசு
சனிக்கிழமை 11/11/2025

## அமெ.- கனடா இடையே வாகன ஒப்பந்தத்துக்கு வாய்ப்பு எதுவுமேயில்லை

### ஹவார்ட் லுட்னிக் திட்டவட்டம்



அமெரிக்க வர்த்தக அமைச்சர் ஹவார்ட் C3▶



# கனேடிய அரசின் புதிய பிரேரணை புலம்பெயர்ந்தோரைப் பாதிக்கும்!

### 300க்கும் மேற்பட்ட சிவில் சமூக அமைப்புகள் திரும்பப் பெறுமாறு ஒரேயடியாக வலியுறுத்தல்

கனடாவின் லிபரல் அரசாங்கம் சமர்ப்பித்துள்ள அதன் எல்லைப் பாதுகாப்புத் தொடர்பான மசோதாவை (பிரேரணையை) திரும்பப்பெறுமாறு 300க்கும் மேற்பட்ட சிவில் சமூக அமைப்புகள் அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்துள்ளன. இது சுதந்திரம், அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் உரிமைகள் உட்பட அனைத்து கனேடியர்களின் தனியுரிமையையும் அச்சுறுத்துவதாக இந்த சமூக அமைப்புகள் கூறுகின்றன. C3▶

# தொலைபேசி மோசடியாளர்கள் பற்றி எச்சரிக்கும் டொறண்டோ பொலிஸார்



நகரத்தில் பெரும்பாலும் ரஷ்ய மொழி பேசும் சமூகத்தைச் சேர்ந்த வயதானவர்களைக் குறிவைத்து நடத்தப்பட்டு வரும் ஒரு தொலைபேசி மோசடி குறித்து டொறண்டோ பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

புலனாய்வாளர்களின் கூற்றுப்படி, சந்தேக நபர்கள் தங்களைவ்குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் அல்லது அறிமுகமானவர்களைப் போல ஆள் மாறாட்டம் செய்து பாதிக்கப்பட்டவர்களை தொலைபேசியில் அழைத்து வருகின்றனர்.

அழைப்பாளர் அவசர சிக்கலில் இருக்கின்றார் எனக் கூறுகின்றனர். அதாவது, கார் விபத்து அல்லது அவசர மருத்துவ உதவியைக் காரணம் காட்டி உடனடி நிதி உதவி கோருகின்றனர். C3▶

# துடிப்பு நின்ற இருதயத்தை மற்றுமொரு நோயாளிக்கு பொருத்தி சாதனை படைத்த கனேடிய மருத்துவர்கள்




கனடாவில், இதயத் துடிப்பு நின்ற இதயம் ஒன்றை நோயாளி ஒருவர் உடலில் பொருத்தி அவருக்கு மறுவாழ்வு கொடுத்துள்ளனர் மருத்துவர்கள்.

இன்றைய காலகட்டத்தில், இதயமாற்று அறுவை சிகிச்சைக்காக ஏராளம் நோயாளிகள் காத்திருக்கும் நிலையில், இந்த அறுவை சிகிச்சை மருத்துவ உலகில் ஒரு மைல்கல்லாக கருதப்படுகிறது!

பொதுவாக, மூளைச்சாவு அடைந்த ஒருவரின் இதயத்தை, அவரது இதயம் துடித்துக்கொண்டிருக்கும்போதே அகற்றி, இதயம் தேவைப்படும் மற்றொருவருக்கு பொருத்துவதுதான் வழக்கம்.

ஆனால், circulatory criteria (DCC) heart transplant என்னும் முறையில், மரணமடைந்த ஒருவருடைய உடலிலிருந்து இதயத்தை அகற்றி இதயம் தேவைப்படும் ஒருவர் உடலில் பொருத்துகிறார்கள்.

அவ்வகையில், கனடாவில், இதயத் துடிப்பு நின்ற இதயம் ஒன்றை நோயாளி ஒருவர் உடலில் பொருத்தி அவருக்கு மறுவாழ்வு கொடுத்துள்ளனர் மருத்துவர்கள்.

கனடாவின் ரொரன்றோ பொது மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்கள் இந்த சாதனையைப் படைத்துள்ளார்கள்.

இதயமாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்ட – அதாவது, இதய தானம் பெற்ற – அந்த நோயாளியில் உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் காணப்படுவதாக, அந்த அறுவை சிகிச்சையை மேற்கொண்ட மருத்துவக் குழுவில் ஒருவரான Dr. Seyed Alireza Rabi தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் மட்டுமே 103,000 பேர் இதயமாற்று அறுவை சிகிச்சைக்காக, இதய தானம் பெற காத்திருக்கிறார்கள்.

ஆக, இதயமாற்று அறுவை சிகிச்சைக்காக ஏராளம் நோயாளிகள் காத்திருக்கும் நிலையில், இந்த அறுவை சிகிச்சை மருத்துவ உலகில் ஒரு மைல்கல்லாக கருதப்படுகிறது!

# தபால் ஊழியரின் வேலைநிறுத்தம் இன்று முதல் சுழற்சி முறைமைக்கு

## கனேடிய அஞ்சல் ஊழியர் சங்கம் தீர்மானம்




கனடாவில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அஞ்சல் ஊழியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம், நாடு தழுவிய வேலைநிறுத்தப் போராட்டத்திலிருந்து இன்று சனிக்கிழமை முதல் சுழற்சி முறையிலான வேலை நிறுத்தப் பேராட்டத்திற்கு மாறப்போவதாகக் கூறுகிறது.

வியாழக்கிழமை இரவு வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையில், கனேடிய அஞ்சல் ஊழியர் சங்கத்தின் (CUPW) தலைவர் ஜன் சிம்ஸன் உள்ளூர் நேரப்படி இன்று சனிக்கிழமை காலை 6 மணி முதல் சுழற்சி முறையிலான வேலை நிறுத்தப்போட்டத்திற்கு மாறுவதன் மூலம் கனேடியர்களின் கைகளில் தபால் மற்றும் பொதிகளை கொண்டுவந்து சேர்க்கும் என்றும், அதே நேரத்தில் சிறந்த கூட்டு ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்வதற்கும், வலுவான பொது அஞ்சல் சேவையை நடைமுறைப்படுத்துவதற்குமான எங்கள் போராட்டம் தொடரும் என்றும் அவர் கூறினார்.

நாடு தழுவிய வேலைநிறுத்தத்திற்குச் செல்லும் முடிவை நாங்கள் எளிதாக எடுக்கவில்லை என்று கூறும் ஜன் சிம்ஸன் தபால் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்குப் பதிலாக புதிய கூட்டு ஒப்பந்தங்களை உருவாக்கி அஞ்சல்களை வழங்குவதையே விரும்புகிறார்கள் என்றும் கூறினார்.

கிட்டத்தட்ட இரண்டு வருட காலமாக தொடரும் இந்தப் பிரச்சினைக்கு ஓர் தீர்வைக்காண வேண்டிய பொறுப்பு கனேடிய அஞ்சல் ஊழியர் சங்கத் மற்றும் கிறவுண் கோப்பரேஷன் ஆகியவற்றிற்கு இருப்பதாக தொழில் அமைச்சர் பற்றி ஹஜ்டு புதன்கிழமை செய்தியாளர்களிடம் கூறினார்.

கிறவுண் கோப்பரேஷனின் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும், அதை இயக்கும் தொழிலாளர்களை மதிக்கவும் CUPW மற்றும் கனடா போஸ்ட் ஆகியவை சரியான சமநிலையைக் கண்டறிய வேண்டும். இதைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு கனேடியர்கள் அவர்களை எதிர்பார்த்துள்ளார்கள் என்றும் ஹஜ்டு கூறினார்.

# திறந்த வேலை அனுமதிக்கு கனடாவில் கால அவகாசம்




கனடாவின் Open Work Permit-க்கு விண்ணபிக்க கால அவகாசம் நீடிக்கப் பட்டுள்ளது.

கனடா அரசு, தற்காலிக குடியிருப்பா ளர்களை நிரந்தர குடியிருப்பாளர்களாக மாற்றும் புதிய திட்டத்தின் கீழ், திறந்த வேலை அனுமதிக்கான (Open Work Permit) விண்ணப்ப திகதியை 2026 டிசம்பர் 31 வரை நீடித்துள்ளது.

இது, 2021-ஆம் ஆண்டு ஜுலை 4-ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட தற்காலிக பொது கொள்கையின் தொடர்ச் சியாகும்.

இந்த கால நீடிப்பு, கனடாவில் தற்கா லிக குடியிருப்பாளராக உள்ளவர்கள், நிரந்தர வதிவிட விண்ணப்பம் பரிசீலனை யில் இருக்கும் காலத்தில், எந்தவொரு தொழிலிலும், எந்தவொரு நிறுவனத் திலும் வேலை செய்ய அனுமதிக்கிறது.

இதன்மூலம், வேலை அனுமதி புதுப் பிப்பின் தேவையை தவிர்க்க முடியும்.

மேலும், இந்த புதிய பொது கொள்கை, வெளிநாடுகளில் உள்ள தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கும் விண் ணப்ப உரிமையை வழங்குகிறது. இது குடும்பம் மீண்டும் ஒன்றிணைவதை விரைவுபடுத்தும் நோக்கத்துடன் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

2026-ஆம் ஆண்டு இறுதிவரை நீட்டிக்கப்பட்டுள்ள இந்த கொள்கை, கன டாவில் வேலை செய்ய விரும்பும் நிரந்தர குடியிருப்பு விண்ணப்பதாரர்களுக்கு பெரும் நன்மையாக அமையும்.

---

## அமெ.- கனடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

லுட்னிக் கனடாவுடன் ஒரு விரிவான வாகன ஒப்பந்தம் செய்வதற்கான எந்த வொரு வாய்ப்பையும் நிராகரிக்கின்றார் எனக் கூறியுள்ளார். அமெரிக்க ஜனா திபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கனடா பிரதமர் மார்க் கார்னி இடையே வொஷிங் டனில் இல் நடைபெற்ற இரண்டாவது நேரடிச்சந்திப்புக்குப் பின்னர் புதன் கிழமை டொறண்டோவில் நடைபெற்ற ஈயுரோஸியா குறூப்பின் கனடா-அமெ ரிக்கா உச்சி மாநாட்டில் சதம் ஹவுஸ் விதிகளின் கீழ் நடந்த கலந்துரையாட லின் போதே லுட்னிக் இந்தக் கருத்துக் களைத் தெரிவித்தார்.

எனினும், அமெரிக்கா கனடாவி லிருந்து உதிரிப் பாகங்களை தொடர்ந்து வாங்கலாம் என்று அவர் கூறினார். ஏப்ரல் முதல் அமெரிக்காவில் அனைத்து வெளிநாட்டுத் தயாரிப்பு வாகனங்க ளுக்கும் 25 சதவீத வரிகள் விதிக்கப் பட்டுள்ளன. கனடா - அமெரிக்கா - மெக் ஸிக்கோ (CUSMA) ஒப்பந்தத்திற்கு உட்பட்ட கனேடிய வாகன ஏற்றுமதிக ளைப் பொறுத்தவரை அமெரிக்காவை தவிர்ந்த வெளிநாட்டு உதிரிப்பாகங்க ளுக்கு வரிகள் பொருந்தும்.

CUSMA க்கு இணங்காத அனைத்து பொருள்களுக்கும் அமெரிக்கா வரி விதித்துள்ளது. அதாவது இரும்பு, அலு மினியம் மற்றும் செப்பு மீதான துறை சார் வரிகளும் இவற்றுள் அடங்கும். பதிலுக்கு கனடாவும் CUSMA வின் கீழ் உள்ளடங்காத வாகனங்களுக்கு 25 சதவீத வரிகளை விதித்து எதிர் நடவடிக் கையில் ஈடுபட்டுள்ளது.

“இது ஒரு கடினமான சூழ்நிலை. ஏனென்றால் நாங்கள் எங்கள் கார்களை இங்கேயே தயாரிக்க விரும்புகிறோம் என்று ட்ரம்ப் கூறினார். அதே நேரத் தில், கனடாவும் கார்களை சிறப்பாக தயாரிப்பதை நாங்கள் விரும்புகிறோம். எனவே, நாங்கள் ஓர் நெறிமுறைக ளில் பணியாற்றி வருகிறோம், அதை நாங்கள் அடைவோம் என்று நான் நினைக் கிறேன்” - என்றும் லுட்னிக் தெரிவித் தார்.

---

## கனேடிய அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பிரேரணையை அரசாங்கம் இரண்டாகப் பிரித்துள்ளது. சில நடவடிக் கைகள் விரைவாக நிறைவேற்றப்படும் என்றும், ஏனையவற்றில் மிகவும் சர்ச்சைக்குரியவற்றை மதிப்பீடு செய்ய கனேடியர்களுக்கு அதிக நேரம் வழங்கப் படும் என்றும் அரசாங்கம் கூறுகி றது.

புதன்கிழமை அறிமுகப்படுத்தப்பட்ட மசோதா C-12, கடலோர காவல்படை யின் பங்கை விரிவுபடுத்துதல், குடி யேற்ற அமைப்பை இறுக்குதல், பாலியல் குற்றவாளிகள் பற்றிய தகவல் பகிர்வதை மேம்படுத்துதல் மற்றும் சட்டவிரோத மருந்துகளை தயாரிக்கப் பயன்படுத் தப்படும் இரசாயனங்களை சிறப்பாகக் கட்டுப்படுத்துதல் ஆகியவற்றுக்கான ஜுன் மாத மசோதாவிலிருந்து பல நட வடிக்கைகளை உள்ளடக்கியது.

பொது பாதுகாப்பு அமைச்சர் கரி ஆனந்தசங்கரி கூறுகையில் -

அரசாங்கம் முதல் மசோதாவான C-2 ஐ நிறைவேற்றுவதைத் தொடர்ந்து, இது அதிகாரிகளுக்கு அஞ்சல்களை தேடுவதற்கும் தனிப்பட்ட தகவல்களை அணுகுவதற்கும் புதிய அதிகாரங்களை வழங்குகிறது என்றார்.

இந்த நடவடிக்கையின் அர்த்தம், மத்தியரசின் எல்லைப் பாதுகாப்புத் திட்டங்கள் நாடாளுமன்றத்தில் இரண்டு தனித்தனி சட்டமன்றப் பாதைகளில் தொடரும், அதில் மசோதா C-12 முதலில் முன்னெடுக்கப்படும்.

ஜுன் மாதத்தில், இந்த சட்டம் எல்லை களைப் பாதுகாப்பாக வைத்திருப்பது, நாடுகடந்த-ஒழுங்கமைக்கப்பட்ட-குற்றங் களை எதிர்த்துப் போராடுவது, போதைப் பொருளைத் தடுப்பது மற்றும் பணமோசடி யைத் தடுத்தல் போன்றவற்றை நோக் கமாகக் கொண்டது என்று அரசாங்கம் கூறியது.

ஆயினும், 300க்கும் மேற்பட்ட சிவில் சமூக அமைப்புகள் இந்த மசோதாவைத் திரும்பப் பெறுமாறு அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்தன. இது சுதந்திரம், அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தோர் உரிமைகள் உட்பட அனைத்து கனேடியர் களின் தனியுரிமையையும் அச்சுறுத்து வதாகக் இந்த சமூக அமைப்புகள் கூறு கின்றன.

---

## தொலைபேசி மோசடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதிக்கப்பட்டவர்கள் அதிக அளவில் பணத்தை கோரி பின்னர் அதை ஒரு குறிப்பிட்ட இடத்தில் இன்னொருவருக்கு வழங்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார் எனப் பொலிஸார் கூறுகின்றனர். பல சந்தர்ப்பங்களில், சந்தேக நபர் பணத்தை சேகரிக்க ஒரு வாகனத்தில் வந்துள்ளார். பாதிக்கப்பட்டவர்கள் கதையை உறுதிப் படுத்துவதை தடுக்க, மோசடியாளர்கள் மிகவும் சாமர்த்தியமாக செயற்பட்டு வருகின்றனர்.

மக்களை விழிப்புடன் இருக்கவும், இதுபோன்ற அழைப்புகளை எச்சரிக் கையுடன் கையாளவும் பொலிஸார் எச்சரிக்கின்றனர்.

இதுபோன்ற சந்தேகத்திற்கிடமான அழைப்பு உங்களுக்கு வந்தால், உடனடி யாகப் பொலிஸாரை தொடர்புகொண்டு தெரிவிக்குமாறு டொறண்டோ பொலிஸ் சேவை ஓர் அறிக்கையில் தெரிவித் துள்ளது.

குடும்ப உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட உண்மையான அவசரநிலைகளுக்காக ஒருபோதும் அந்நியர்களிடம் பணத்தை ஒப்படைக்க வேண்டிய தேவையில்லை என்பதை பொலிஸார் பொதுமக்களுக்கு நினைவூட்டுகின்றனர்.




# கனடா குடிவரவு மோசடியில் பிடிபட்டால் 5 ஆண்டுகள் நுழைய தடை விதிக்கப்படும்

கனடா குடிவரவு மோசடியில் பிடிபட்டால் 5 ஆண்டுகள் நுழைய தடை விதிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடா குடியுரிமை, அகதிகள் மற்றும் குடிவரவு துறை (IRCC) கடந்த வாரம் குடிவரவு மோசடிகள் அதிகரித்து வருவது தொடர்பில் எச்சரிக்கையொன்றை வெளியிட்டது.

அதில், தவறான ஆவணங்கள் அல்லது பொய்யான தகவல்களை சமர்ப்பிப்பவர்கள் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் கனடாவிற்குள் நுழைய தடை செய்யப்படுவார்கள் எனத் தெரிவித்துள்ளது.

2024-ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் சராசரியாக 9,000 மோசடிகள் தொடர்பாக விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன.

பொய்யான பாஸ்போர்ட், வேலை வாய்ப்பு ஆவணங்கள், கல்வி சான்றிதழ்கள், திருமண ஆவணங்கள், மரபணு சோதனை அறிக்கைகள் உள்ளிட்டவை தவறானவையாக இருந்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

மேலும் விண்ணப்பதாரரின் பெயரில் IRCC-யில் நிரந்தர மோசடி பதிவாகும் அபாயமும் உள்ளது.

இந்த எச்சரிக்கையின் பின்னணியில், பெங்களூருவில் Owlspriority India Pvt Ltd என்ற தனியார் நிறுவனத்தின் மீது பலர் மோசடியாக வேலை வாய்ப்பு மற்றும் விசா வாக்குறுதிகள் அளித்ததாக முறைப்பாடு அளித்துள்ளனர்.

IRCC மேலும், தற்காலிக திருமண மோசடிகள், விசா கட்டணங்களை திருப்பி வாங்கும் chargeback மோசடிகள் போன்றவற்றையும் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கிறது.

விசா கட்டணத்தை திருப்பி வாங்கும் விண்ணப்பதாரர்கள் 10 ஆண்டுகள் வரை கனடாவிற்குள் நுழைய தடை செய்யப்படலாம்.

உண்மையான ஆவணங்களுடன் உரிமம் பெற்ற ஆலோசகர்களுடன் பணியாற்ற வேண்டும் என பொது மக்களுக்கு IRCC அறிவுறுத்தியுள்ளது.

# கனடாவுக்கு அனுப்புவார் என்று ஏமாற்றிய முகவர் அதனால் இந்திய இளைஞர் எடுத்த தவறான முடிவு

கனடாவுக்குச் செல்வதற்காக முகவர் ஒருவரிடம் 9 லட்ச ரூபா செலுத்திய நிலையில், முகவர் ஏமாற்றியமையாக் தன் உயிரைத் தானே மாய்த்துக்கொண்டார் இந்தியர் ஒருவர்.

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்திலுள்ள மோகா என்னுமிடத்தைச் சேர்ந்தவர் ககன்தீப் சிங் (வயது 26).

அதே பகுதியைச் சேர்ந்த பயண முகவரான ஷிஃபு கோயல் மற்றும் அவரது மனைவியான ரீனா கோயல் ஆகியோரிடம், தன்னைக் கனடாவுக்கு அனுப்ப உதவுமாறு கோரியுள்ளார் சிங்.

அவரை கனடா அனுப்புவதற்கான ஆவணங்கள் தயார் செய்வதற்காக இந்திய மதிப்பில் 9 லட்ச ரூபா கேட்டுள்ளனர் கோயல் தம்பதியர்.

தங்களிடம் அவ்வளவு பணம் இல்லாததால், சிங் 50,000 ரூபாய் கொடுக்க,சிங்குக்குபணம்கடன்கொடுக்க பைனான்சியர் ஒருவரை ஏற்பாடு செய்துள்ளனர் கோயல் தம்பதியர்.

அதன்படி, தீப் பைனான்ஸ் என்னும் நிறுவனத்தின் உரிமையாளரான குர்தீப் சிங் அலுவாலியா, ககன்தீப் சிங்குக்கு 9 லட்ச ரூபா கடன் கொடுக்க, அந்த பணத்தை கோயல் தம்பதியரின் கணக்குக்கு அனுப்பியுள்ளார் சிங்.

ஆனால், தன் மகனை கோயல் தம்பதியர் கனடாவுக்கு அனுப்பவும் இல்லை, கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்கவும் இல்லை என்கிறார் சிங்கின் தாயாகிய ஹர்ஜீத் கௌர்.

இதற்கிடையில், பைனான்சியரான அலுவாலியா கொடுத்த பணத்தைத் திருப்பிக் கொடுக்குமாறு சிங்கை நிர்ப்பந்திக்க, மன உளைச்சலுக்காளான சிங் செவ்வாயன்று, அதாவது, கடந்த 7ஆம் திகதி, விஷம் குடித்துள்ளார்.

உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துவிட்டார் சிங்.

அதைத் தொடர்ந்து, கோயல் தம்பதியரும், பைனான்சியர் அலுவாலியாவும் சேர்ந்து தன் பிள்ளையை ஏமாற்றி, இப்படி ஒரு துயர முடிவை எடுக்க சிங்கைத் தூண்டிவிட்டனர் என சிங்கின் தாயான கௌர் பொலிஸில் புகாரளித்துள்ளார்.

கோயல் தம்பதியர் மற்றும் பைனான்சியர் அலுவாலியா மீது பொலிஸார் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.